
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1107

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

50



(TAMCO) லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வியல் வெளிச்சத்திற்கான கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறது. இது கல்வியில் பின்தங்கிய முஸ்லிம்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### பயன்பெறுவோரின் விகிதம்

டாம்கோவினால் பயன்பெற்ற சிறுபான்மையினர்களை முழுமையாக முஸ்லிம்கள் என்று மட்டும் சுருக்கிவிடவும் முடியாது. ஏனெனில், டாம்கோ சட்டம் மற்றும் விதிகளின்படி, எந்த ஒரு குறிப்பிட்ட மதத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. சுய உதவிக்குழு கடன்களில் இவர்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. அதேபோல சீக்கியர்கள், புத்த மதத்தினர், சமணர்கள் மற்றும் பார்சிகள் 1 - 2 சதவிகிதம் வரை கடன் பெறுகின்றனர். கைவினைத் தொழில், சிறு வியாபாரம் சார்ந்து இவர்கள் அதிகம் கடன் பெறுகின்றனர். அரசின் நிதியாண்டின் கொள்கை விளக்கக் குறிப்புகளில் இருந்து இவை தெரியவருகிறது.

### குறைந்த வட்டியில் கல்விக்கடன்!

ஒன்றிய அரசு சில கல்வி உதவித்தொகைகளை நிறுத்தியபோதும், டாம்கோ மற்றும் மாநில அரசின் ஒருங்கிணைந்த திட்டங்கள் மாணவர்களுக்குக் கைகொடுத்தன. மருத்துவம், பொறியியல் மற்றும் மேலாண்மை போன்ற செலவு மிகுந்த படிப்புகளைச் சிறுபான்மையின மாணவர்கள் எவ்விதத் தடையுமின்றி, தொடர டாம்கோவின் குறைந்த வட்டி ‘கல்விக்கடன்’ வழிவகை செய்தது. சாதாரண வங்கிகளில் கடன் கிடைக்காத நிலையில், சிறுபான்மையினர் கந்துவட்டிக் கொடுமையில் இருந்து மீண்டு வந்துள்ளனர் என்றால், அதில் டாம்கோவின் பங்கு அளப்பரியது. மசூதிகளில் பணிபுரியும் உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தொழில் கடன்கள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டதால், அவர்களின் மாற்று வாழ்வாதாரமும் மேம்பட்டுள்ளது.

டாம்கோ தொடங்கப்பட்ட 1999 முதல் தற்போது வரை, சுமார் 50,000 முதல் 65,000 சிறுபான்மையின மாணவர்கள் கல்விக்கடன் மூலம் நேரடியாகப் பயன்பெற்றுள்ளனர். பொருளாதார வசதியற்ற குடும்பங்களில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள்

# கேட்டதையெல்லாம் கொடுக்கும் கழகம்!

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

இந்திய அளவில், சமூகக் குழுக்களின் அடிப்படையில் வறுமை நிலையை ஆய்வு செய்யும்போது, முஸ்லிம் சமூகம் கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் பெரும் சவால்களை எதிர்கொள்கிறது. தேசிய அளவில், முஸ்லிம்களின் வறுமை விகிதம் சுமார் 25 சதவிகிதம் முதல் 31சதவிகிதம் வரை உள்ளதாக, ‘சச்சார் கமிட்டி’ முதல் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வட மாநிலங்களில், குறிப்பாக பீகார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் முஸ்லிம் சமூகத்தினர் கல்வி மற்றும் முறையான மருத்துவ வசதி கிடைக்காமல், அதிக அளவில் வறுமையில் (பல பரிமாண வறுமைக் குறியீடு- MPI) சிக்கியுள்ளனர். ஆனால், திராவிட மாடலால் தமிழ்நாடு கண்டிருக்கும் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியானது, தமிழ்நாட்டில் சிறுபான்மையினரையும் சேர்த்தே வறுமையில் இருந்து மீட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வறுமை விகிதமே வெறும் 2.2 சதவிகித (நிதி ஆயோக் 2023 அறிக்கை). இதில் முஸ்லிம் சமூகத்தின் வறுமை விகிதம் மிகக் குறைவு. அதற்கு இஸ்லாமியர்கள் நலனில், திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து செலுத்தி வரும் தனிப்பெரும் அக்கறையும் முதன்மையானது. ஏற்கெனவே, பலமுறை குறிப்பிட்டிருப்பதைப் போல தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்படும் 3.5 சதவிகித உள் இடஒதுக்கீடு காரணமாக, அரசு வேலைகள் மற்றும் உயர்கல்வியில் முஸ்லிம்களின் பங்களிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் முஸ்லிம்களின் சமூகப் பொருளாதார நிலை மேம்பட்டுள்ளது.

அதே போல பொருளாதாரப் பாதுகாப்புக்கான ஏற்பாடாக உருவாக்கப்பட்ட டாம்கோ

உலமாக்கள் வாரியத்தைத் தொடங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர், அதில் அளிக்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை 3,000 ரூபாயாக உயர்த்தியவர், நம் திராவிட மாடல் நாயகர் என கடந்த சில வாரங்களுக்கு முன் எழுதி இருந்தோம். இப்போது, அந்த ஓய்வூதியத்தை 3,000 ரூபாயில் இருந்து 5,000 ஆயிரமாக உயர்த்தி இருக்கிறார் நம் முதலமைச்சர்.

எனினும் அவரவர் மக்கள்தொகைக்கு ஏற்ப உரிய விகிதத்தில் அனைத்து சிறுபான்மை மதத்தினரும் பெறுகிறார்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டியது. இஸ்லாமியர்கள், சுமார் 75சதவிகிதம் - 80 சதவிகிதம் வரை கடன் பெறுகின்றனர். வணிகம் மற்றும் சிறு தொழில்களுக்காக அதிக அளவில் கடன் பெறுகின்றனர். கிறித்தவர்கள் சுமார் 18 சதவிகிதம் - 22 சதவிகிதம் வரை இதில் கடன் பெறுகின்றனர். கல்விக்கடன் மற்றும் மருத்துவம் (MBBS), பொறியியல் (BE/B.TECH) மற்றும் மேலாண்மை (MBA) போன்ற உயர்கல்வியைப் பெற்று, முதல் தலைமுறைப் பட்டதாரிகள் ஆனது, டாம்கோவால் சாத்தியமானது. இவர்களில் பல சிறுபான்மையின இளைஞர்கள் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளில் நல்ல ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.




### வாழ்வாதார பாதுகாப்பு!

டாம்கோ தொடங்கப்பட்ட கால் நூற்றாண்டுக் காலத்தில், தமிழ்நாட்டின் சிறுபான்மையின சமூகம் அடைந்துள்ள வளர்ச்சியானது வெறும் பொருளாதார முன்னேற்றத்துடன் நின்றுவிடாமல், சமூக அந்தஸ்து மற்றும் வாழ்வாதார பாதுகாப்பாகவும் உருவெடுத்துள்ளது. டாம்கோ வழங்கிய கடனால் வேலை தேடுபவர்களாக இருந்த ஆயிரக்கணக்கான சிறுபான்மையின இளைஞர்கள், இன்று வேலை தருபவர்களாக - தொழில்முனைவோர்களாக உருவெடுத்துள்ளனர். மளிகைக் கடைகள், ஜவுளி வியாபாரம், காலணி தயாரிப்பு மற்றும் உணவகங்கள் போன்ற சிறு வணிகங்கள் டாம்கோ கடனுதவியால் நிலை பெற்றுள்ளன.

சிறுபான்மையின பெண்கள் அடங்கிய ஆயிரக்கணக்கான சுய உதவிக் குழுக்கள், ‘நுண்நிதி’ (MICRO FINANCE) மூலம் சொந்தமாகத் தொழில் தொடங்கியுள்ளனர். வீட்டில் முடங்கிக்கிடந்த பெண்கள், டாம்கோ கடனுதவிமூலம் தையல் கூடங்கள், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு நிலையங்களை நடத்தி, குடும்பத்தின் பொருளாதார முடிவுகளை எடுக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில் சுமார் 2.15 லட்சம் குடும்பங்களை, வறுமையில் இருந்து மீட்டெடுத்திருக்கிறது டாம்கோ. இந்த சமூகப் புரட்சிக்கு வித்திட்டவர் கலைஞர், வேர்விட்டு வளரச் செய்தவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! சிறுபான்மையின மக்களுக்கு அரசியல் அரணாக இருக்கும் கட்சியாக மட்டுமல்ல, சமூக வாழ்வியல் மேம்பட அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுக்கக்கூடிய ஆட்சியையும் நடத்திக் கொண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

“சமூக வாழ்வியல் மேம்பட அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுக்கக்கூடிய ஆட்சியையும் நடத்திக் கொண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.”

...நீளும்

### சிறுபான்மையினரை நீக்கவே எஸ்.ஐ.ஆர்.?

அடுத்த சில மாதங்களில் அசாமில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், “சிறப்புத் தீவிர திருத்தம் நடைபெறும்போது, நான்கு முதல் ஐந்து லட்சம் மியா முஸ்லிம்கள் நீக்கப்படுவார்கள் என்றும், மியா மக்களை துன்பப்படுத்துவதே எனது வேலை” என்றும் வெளிப்படையாக பேசியிருக்கிறார் அம்மாநில பா.ஜ.க. முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா. சிறப்புத் தீவிர திருத்தத்தை, தேர்தல் ஆணையம்தான் மேற்கொள்கிறது, அதற்கும் பா.ஜ.க.வுக்கும் என்ன சம்பந்தம் என்ற சங்கிகளின் கேள்விகள் எத்தனை அபத்தமானது என்பதை, ஹிமந்த பிஸ்வா சர்மாவின் பேச்சு உறுதிப்படுத்துகிறது.

எல்லா மாநிலங்களிலும் எஸ்.ஐ.ஆர். என்ற பெயரில், இதற்குத்தான் குறி வைக்கிறார்களோ என்ற சந்தேகமும் வலுக்கிறது. குறிப்பாக, மேற்கு வங்கத்தில் மாவட்டங்கள்தோறும் நடைபெறும் எஸ்.ஐ.ஆர். விசாரணைகளில் சிறுபான்மையினரே அதிகம் அழைக்கப்பட்டுள்ளனர் என்பது ‘தி வயர்’ ஊடகச் செய்தியின் மூலம் தெரிய வந்துள்ளது. மால்தாவில், சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் ஒரு வாக்குச்சாவடியில் 1,300 வாக்காளர்களில் 1,200 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது, அதேசமயம் இந்துக்கள் அதிகம் வசிக்கும் வாக்குச்சாவடியில் 1,279 பேரில் 73 பேருக்கு மட்டுமே நோட்டீஸ் சென்றுள்ளது.

மணிக்சக் சட்டமன்றத் தொகுதியில், இந்துக்கள் அதிகம் வசிக்கும் வாக்குச்சாவடி எண் 49-இல் 1,279 வாக்காளர்கள் உள்ளனர், அவர்களில் 73 பேருக்கு மட்டுமே விசாரணைக்கு அழைப்பு வந்துள்ளது. இதற்கு நேர்மாறாக, சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் நூர்பூரில் உள்ள வாக்குச்சாவடி எண் 62-இல், 1,300 வாக்காளர்களில் 1,200 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் முர்ஷிதாபாத் மாவட்டத்தில், எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின் அளவு மிகவும் விரிவானது. மாவட்ட அளவிலான தரவுகளின்படி, முர்ஷிதாபாத்தின் சுமார் 54 லட்சம் வாக்காளர்களில் 27.6% பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், முந்தைய கணக்கெடுப்பான 2002 வாக்காளர் பட்டியலுடன் 2% வாக்காளர்கள் மட்டுமே பொருந்தவில்லை.

## ஃப்ளாஷ்பேக்

### தலைவரும், தளபதியும் இணைந்த படம்!



2016-ஆம் ஆண்டு, கழகத்தின் புதிய சார்பு அணியாக மருத்துவர் அணி உருவாக்கப்பட்டது. அப்போது, நியமனம் செய்யப்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்ட நானும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கூட்டத்துக்குப் பின்னர் அன்றைய கழகப் பொருளாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்களிடம் வாழ்த்து பெற்றோம் . ஆனாலும், புகைப்படம் எடுக்க அவகாசமில்லாத நிலை. அதன்பின்னர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற சென்ற நேரத்தில், திடீரென அன்பு தளபதியார் - தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்க வந்தார். அந்தத் தருணத்தில் தளபதியாரிடம் “அண்ணன் ஒரு போட்டோ” என்று கேட்டேன். அப்படி நம் தானைத் தலைவரும் தளபதியாரும் இருக்க, நான் எடுத்துக் கொண்ட இந்தப் படம் என் வாழ்நாள் பொக்கிஷம்.



டாக்டர். ஏ.ஜி.பி.சுகுமார்

**- டாக்டர்.ஏ.ஜி.பி.சுகுமார், மருத்துவ அணி மாவட்ட துணை அமைப்பாளர், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### போராட்டத் தலைமை!

1957-ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க.-வின் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தமிழ் நாட்டில் இந்தித் திணிக்கப்படுவதை, வன்மையாக எதிர்ப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1957-ஆம் ஆண்டு அக்டோபர் 13 - ஆம் நாளை, இந்தி எதிர்ப்பு நாளாகப் பெருந்திரளான மக்களுடன் அமைதியான முறையில் கடைப்பிடிப்பது, என முடிவானது.இப்போராட்டத்துக்குத் தலைமை ஏற்றவர் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131